[1992 ஏப்ரல் 3
பிற்பகல் 1.40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேதாரண்யம் சட்டமன்ற உறுப்பினர் அருமை நண்பர் திரு. பி. வி. ஆர். அவர்கள் பேசுகிறபோது, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நாங்கள் எதிர்ப்பதாகச் சொன்னார்கள்: பேராவூரணி, பட்டுக்கோட்டை, திருவோணம் ஆகிய 3 தொகுதிகளிலே உள்ள மக்களெல்லாம் சேர்ந்துதான் எதிர்த்தோம். அது உண்மைதான். அங்கே தண்ணீரே இல்லாமல் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிற சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தினாலேதான் அதை எதிர்த்தோம் என்பதைச் சுட்டிக்காட்டி, இறுதியாக சர்க்கரைப் போல தித்திக்கும் இந்தப் புரட்சித் தலைவியார் ஆட்சியில், பேராவூரணி தொகுதியில் ஒரு சர்க்கரை ஆலையை அமைத்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன். ஜெய்ஹிந்த்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விரிவான பதிலுரையைத் தர வேண்டுமென்று தெரிவித்திருக்கிற காரணத்தினால், அதற்கு இப்போது கால அவகாசம் இருக்காது என்று கருதி, 6-4-92 அன்று திங்கட்கிழமை அவர்களுடைய பதிலுரை இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அரசினர் தீர்மானம்

விதி 32—ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவரின் தீர்மானம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள்—விடைகள்' என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32 ஐ, 6-4-1992, அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்' என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை; தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. மேஜையை தட்டும் ஒலி

1992 ஏப்ரல் 3] [பேரவைத் தலைவர்]

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன, பேரவை மீண்டும் (6–4–1992) திங்கட்கிழமை, காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.41 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

53. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 1990–91 ஆம் ஆண்டிற்கான நாற்பத்திரெண்டாவது ஆண்டறிக்கை. 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம்–1956) 619-எ பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப் பெற்றது (தமிழ், ஆங்கிலம்.)

அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

76. கோரிக்கை எண். 24—பெருந் தொழில்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. 1992–93. (தமிழ், ஆங்கிலம்.)

77. தொழில்கள் பற்றிய சாதனைச் திட்டம். 1992–93. (தமிழ், ஆங்கிலம்).

78. சர்க்கரைத் தொழில் பற்றிய செயல்முறைத் திட்டம் 1992–93. (தமிழ், ஆங்கிலம்).

79. புவியியல் மற்றும் சுரங்கத்துறை பற்றிய செயல் முறைத் திட்டம், 1992–93. (தமிழ், ஆங்கிலம்.).